S.C.No. 95/2021 நாள் 20.04.2026 PW 1 – திரு.முத்துபாண்டி

(Crl.M.P.No. 14/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிதரப்பில்)

அ.சா.ஆ–1 நான் சொல்ல சொல்ல எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார்மனுவில் இறந்துபோன என் அண்ணனுக்கு அளவுக்கு அதிகமான குடிபழக்கம் உண்டு என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரிக்கு முருகேஸ்வரி என்ற ஒரு தங்கை உண்டு என்றால் சரிதான். இந்த சம்பவ காலத்தில் முருகேஸ்வரிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். முருகேஸ்வரியை இறந்துபோன என் அண்ணன் துரைராஜ் வெட்டிவிட்டதாகவும் ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.